Registered as a News paper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 1-2-1985 வெள்ளிக்கிழமை (தை 19-ஜனவரி.10) முழக்கம் 191

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் கருத்து:

## இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது கவலை தருகிறது!

(லண்டன்)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து உரையாடியபோது, ''இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது கவலை தருகிறது.'' என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஹமீதிடம் தெரிவித்தாராம். ''இலங்கையின இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அந்நாட்டின் சிறுபான்மையினருடன் ஒத்துழைக்க வேண்டும், பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும்'' என்ற தன்கருத்தையும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர்

—4-ம் பக்கம் பார்க்க

★ பிரதமர் ராஜீவ்காந்தி அறிவிப்பு !

## ஈழத்தமிழ் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரம் ; அங்கே நடப்பவை பயங்கரமானவை !

(புதுடில்லி)

இலங்கையின் தமிழ் பிரதேசங்களில் ராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன தமிழ் பகுதிகளில் நடப்பவை பயங்கரமானவை என்று பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி மீண்டும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இதுதொடர்பாக அவர் குறிப்பிடுகையில் இந்தியாவில் இலங்கை அகதிகள் சுமார் நாற்பதாயிரம்பேர் இருக்கிறார்கள். இவர்கள் 1983 ஜூலை இனக்கலவரத்தின் பின்னர் இங்கு வந்தவர்கள். தமிழ் பகுதிகளில் நிலவும் ராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படும்வரை இவர்கள் இலங்கை திரும்ப முடியாது'' என்றும் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்ட பின்னரே தமிழர்கள் ஓரளவுக்குப் பாதுகாப்பாகவாழ முடியுமென்றும் குறிப்பிட்ட ராஜீவ்காந்தி, அரசியல் மதிநுட்பத்துடன் ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# திக்கம் ராணுவ இளைஞர் மோதல்: இருபது பேர் இறந்திருக்கலாம்?

## கைக்குண்டுகள் துப்பாக்கி வேட்டுகளால் இருபகுதியினரும் இரு மணித்தியாலம் சமர்!

(வல்வெட்டித்துறை)

திக்கம் என்ற இடத்தில் நேற்று அதிகாலை இரண்டு மணிக்கும் நான்கு மணிக்குமிடையில் சுமார் இரு மணி நேரமாக ராணுவத்தினருக்கும் தீவிரவாத இளைஞர்களுக்குமிடையே நடைபெற்ற துப்பாக்கி மோதலில் சுமார் இருபது பேர் இறந்திருக்கலாமென தெரியவந்துள்ளது. ராணுவத்தினர் எவரும் மரணமடையவில்லையென்றும், ஒருவருக்கு மட்டுமே காயமேற்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்த போதிலும், சம்பவம் நடைபெற்ற பகுதியிலிருந்து கிடைத்த தகவல்கள் அதற்கு மாறுபட்டதாகவே இருக்கின்றன.

பெருந்தொகையானவர்கள் மரணமானதாகவும், சிலர் கடத்திச்செல்லப்பட்டதாகவும் நேற்றுக்காலை முதல் குடாநாடு முழுவதும் பெரும் வதந்திகள் காட்டுத்தீ போலப் பரவின. ஆனாலும் இதனை எந்த ''வட்டாரமும்'' கடைசிவரை ஊர்ஜிதம் செய்யவில்லை,

நேற்று நள்ளிரவு இரண்டு மணியளவில் இராணுவத்தினர் திக்கம் பகுதியில் திடீர் சோதனையொன்றை மேற்கொள்ளச் சென்றபோது அவர்களை நோக்கித்துப்பாக்கி

—4-ம் பக்கம் பார்க்க

25 பேர் தப்பிச் சென்றனர்

## மன்னார் கள்ளடிச்சந்தியில் எண்மர் சுட்டுக் கொலை!

(மன்னார்)

மன்னார்ப்பகுதியிலுள்ள கள்ளடிச் சந்தியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சம்பவமொன்றில் எட்டுத் தமிழ் தீவிரவாத இளைஞர்கள் கொல்லப்பட்டதாகவும், இவர்கள் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்றும் அரசாங்கத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

அவர்களின் முகாமொன்றை பாதுகாப்புப்படையினர் சுற்றிவளைத்துச் சுட்டபோதே எண்மர் மரணமானதாகவும். சுமார் 26 பேர் காட்டுக்குள் தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

—4-ம் பக்கம் பார்க்க

## 'டைம்ஸ்' சீல்

கொழும்பிலுள்ள 'டைம்ஸ்' பத்திரிகை ஸ்தாபனம் நேற்று சீல் வைக்கப்பட்டது. இதன் வெளியீடுகள் இனிமேல் வெளிவரமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியும் சத்வாலும் நேற்றும் சந்தித்து பேசினர்

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் எஸ். ஜே. எஸ். சத்வாலும் நேற்று மீண்டும் சந்தித்து சுமார் நாற்பது நிமிடங்கள் பேசினர். கடந்த 26ம் திகதி நடைபெற்ற சந்திப்பின் தொடர்ச்சியாக இது இடம்பெற்றது. ஜனாதிபதி - பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் முக்கிய உயர்மட்டச் சந்திப்புப் பற்றியும் அதற்கு முன்னர் இலங்கை அமைச்சர் ஒருவர் புதுடில்லி செல்வது பற்றியும் இவர்கள் பேசியதாகத் தெரிகிறது. அமைச்சரின் விஜயத்திகதி ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படலாம்.

## போலிக் கடிதம் உள்வீட்டு வேலை?

யாழ் குடாநாட்டைச் சேர்ந்த ஆறு சட்டத்தரணிகள் கொலை செய்யப்படுவார்கள் என்று ஒரு இயக்கத்தின் பெயரால் யாழ்ப்பாண நீதிபதி ஒருவருக்கு நேற்று அனுப்பப்பட்ட கடிதம் போலியானது

4-ஆம் பக்கம் பார்க்க

## உப்பு லொறியில் பிரசுரம்; இளைஞர் ஒருவர் தற்கொலை?

(கிளிநொச்சி நிருபர் மு. விவேகானந்தன்)

உப்பு ஏற்றிக் கொண்டு சென்ற லொறியொன்று ஈரற்பெரிய குளத்தடியில் வைத்து ஆயுதப்படையினரால் சோதனையிடப்பட்டபோது லொறியிலிருந்த இளைஞர் ஒருவர் 'சைனட்' குளிசையை அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரியவந்துள்ளது. லொறிச் சாரதி கைது செய்யப்பட்டாராம்.

—4ம் பக்கம் பார்க்க

## போன நகைகள் மீண்டும் வந்தன

கொட்டடியிலுள்ள ஒருவீட்டில் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்ட சமயம் காணாமல் போன பெறுமதி வாய்ந்த நகைகள் 24 மணித்தியாலத்தில் மர்மமாக மீண்டுவந்ததாம்,

—4ம் பக்கம் பார்க்க

## பஸ் விபத்தில் அறுவர் காயம்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று உமையாள்புரத்திற்கும் பரந்தனுக்கும்

—4-ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் வங்கியில் பணத்துடன் வானைக் கடத்தும் முயற்சி தோல்வி

குருநகர் இராணுவ முகாமிற்கு முன்னால் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் நேற்றுக் காலை நடைபெறவிருந்த கொள்ளை தோல்வியில் முடிவடைந்தது.

இராணுவ முகாமில் இருந்து பணத்தை எடுத்து வந்த வங்கியின் பாதுகாப்புக் கவச வாகனம் வங்கி வளவுக்குள் நுழைந்தவுடன் சில இளைஞர்கள் அதற்குள்ளிருந்த சாரதியையும், முகாமையாளரை

—4ம் பக்கம் பார்க்க

## இரண்டு பவுஸர் கடத்தல்

நேற்றிரவு தனியாருக்கு சொந்தமான இரண்டு பவுஸர்கள் இனந்தெரியாத சிலரால் யாழ் நகரில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டன.

## இரு பஸ்களில் சென்றனர்

கொழும்பில் நடைபெறும் ஜி.சி.ஈ பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்ய அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் நூறு ஆசிரியர்கள், விசேஷமாக ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டு பஸ்கள் மூலம் நேற்று கொழும்பு சென்றனர் இவ்விரு பஸ்களும் திரும்பி வரும்போது மாணவர் இலவச பாடப் புத்தகங்கள் ஏற்றிவரப்படுமென கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை தெரிவித்தார்.

## ஹாட்லி, மெதடிஸ்த 9 - 12 தர வகுப்புகள் புற்றளை, வட இந்துவில் 6 முதல் ஆரம்பம்!

எதிர்வரும் ஆறும் திகதி புதன்கிழமை முதல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியினதும் மெதடிஸ்த மகளிர் கல்லூரியினதும் 9 முதல் 12 வரையான வகுப்புக்களை முறையே புற்றளை மகாவித்தியாலயத்திலும், வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடத்துவதென்று வட இந்து மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு எம் சிமியாமபிள்ளை உட்பட ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரிகளின் அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும், பருத்தித்துறை பிரஜைகள் குழுவும், பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் சச்சிதானந்தனும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் ஹாட்லி கல்லூரியினதும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியினதும் மாணவர்கள் எதிர்

—4ம் பக்கம் பார்க்க

# பாரத உதவியின்றி இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது என ஸ்ரீமாவோ பேச்சு

நாம் இப்போது பதவியிலிருப்போமானுல் இனப்பிரச்சினையைத்தீர்த்திருப்போம்இந்த அரசாங்கம் அதைச் செய்ய முடியாதவர்களாகி விட்டனர். அவர்கள் நமது வழிமுறை என்னவெனத் தெரிந்து கொள்ள விரும்புகின்றனர் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினுர்.

குளியாபபிட்டியில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவின் உதவியின்றி இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாதென்றும் ஆனுல் பிரதமரோ இது தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேசுவதில்லை என்ற நிலையில் நிற்பதாகவும் குறிப்பிட்டார்.

நாடு இன்று மிகச் சிக்கலான நிலையை அடைந்துள்ளது. அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய அனைத்துத்துறைகளிலும் சீரழிவு காணப்படுகிறது. வடக்கில் அரச யந்திரம் ஸ்தம்பித்துப் போய் விட்டது. போக்குவரத்துச் சேவைகள் நிலைகுலைந்து விட்டன. வரலாற்றில் முதல் தடவையாக சிங்கள மக்கள் அகதி முகாம்களில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது இத்தனைக்கும் யூ என்.பி அரசே பொறுப்பு என்றும் ஸ்ரீமாவோ குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பைச் சுமக்கும் ஜனுதிபதி தன்னுல் அது முடியா விட்டால் ராஜினுமாச் செய்து விட்டுப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். அப்போது பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவர் யார் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். இதனுல்தான் நாட்டை மேலும் வங்குரோத்தாக்கி வெளிநாட்டுச் சக்திகளிடம் அடகு வைக்காது ராஜினுமாச் செய்யுங்கள் பொதுத் தேர்தலை வையுங்கள்என அரசை நாங்கள் கேட்கிறேம் என்றும் பேசினுர்.

# பகலில் மங்கள வைபவம்; இரவில் துணிகர கொள்ளை

(சுண்டுச்குளி)

பகலில் பூப்புனித நீராட்டு விழா நடைபெற்ற வீட்டில் இரவில் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் ரொக்கப் பணமும் மர்மமான முறையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன கோப்பாய் வடக்கு பூதர்மடத்தடியிலுள்ள ஒருவீட்டிலேயே இத் துணிகரக் கொள்ளை நிகழ்ந்துள்ளது.

பிரஸ்தாப வீட்டு உரிமையாளரின் மகளின் பூப்புனித நீராட்டு வைபவம திங்கட்கிழமை பகல் சொண்டாடப்பட்டதென்றும், இரவு நகைகளையும், 10,000 ரூபா ரொக்கப் பணத்தையும் பெட்டியொன்றில் வைத்து அறைக்குள் பூட்டி வைத்ததாகவும், மறுநாட் காலை அறையைத் திறந்தபோது நகைப்பெட்டியைக் காணுததால் அதிர்ச்சிக்கும், திகைப்புக்கும் உள்ளானுர்கள் என்றும் தெரிய வருகிறது.

பின்னர் வீட்டிற்கருகாமையில் நகைகள் வைக்கப்பட்டிருந்த வெற்றுப் பெட்டி அனுதரவாகக் கிடக்கக் காணப்பட்டது இத் திருட்டுச் சம்பவம் பற்றிப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பிள்ளைகள் கஷ்டம் பெற்றுர் கவலை

(சரசாலை)

சில பாடசாலைகளில் பாலர் வகுப்பில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கட்கு இன்னும் பாட நூல் வழங்கப்படவில்லை அரசாங்கத்தால் வழங்கப்படும் பாட நூல்கள் வெளியில் வாங்க முடியாது. சிறுபிள்ளைகள் புத்தகம் இல்லாது எப்படி பாடசாலை போவது எனக்கூறி சில பிள்ளைகள் பாடசாலைக்கே செல்லாது நின்று விடுகின்றனர். இதனுல் பிள்ளைகள் மட்டுமல்ல பெற்றேரும் கவலை கொண்டுள்ளனர்.

## வாலிபரின் "சமூக சேவை"

(அச்சுவேலி)

பாதுகாப்பு படையினருக்கு அஞ்சி உள்ளூர்ப் பாதையால் நடந்து சென்ற பெண்மணியின் பெறுமதியான பொருட்கள் அடங்கிய "கூடை" கூட்டிச்சென்ற வாலிபர் ஒருவரினுல் கையாடப் பட்டது. இளம் பெண் கொண்டு வந்து கைமாறிய கூடையில் 600 ரூபா பெறுமதியான சாராயப் போத்தல்களும் இருந்ததாம்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் சிலமணி நேரம் வல்லைவெளியில் அமைந்துள்ள பாலத்தில் பாதுகாப்புப் படையினர் கவச வாகனம் சகிதம் தங்கிநின்றமையினுல் அந்த வழியால் எந்த விதமான வாகனப் போக்குவரத்தும் நடை பெருத வேளையில் இச்சம்பவம் நடைபெற்றதாம்.

## ஆறு நாள் பணியில்

(சுண்டுச்குளி)

தற்போதைய சூழ்நிலையில் பொது மக்களின் அத்தியாவசிய தவைகளுக்கு உதவும் முகமாக வலி கிழக்கு உதவி அரச அதிபர் பணி மனையில் விசேட சேவை அலுவலகர்களும் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களும் தொடர்ந்து கடமையாற்றி வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஆறுநாட்களும் இவர்கள் சேவை புரிந்து வருகின்றனர்.




❋ பூநகரி சரவணமுத்து தங்கமணி தம்பதிகளின் மகன் குணதாசன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

❋ வேலணை கிழக்கு வரதராஜா மணிமேகலை தம்பதிகளின் மகன் வசிகரன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

❋ கைதடி செற்கு நவரத்தினம் அகிலாண்டேஸ்வரி தம்பதிகளின் மகன் அஜேஜன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

❋ கிளிநொச்சி திருநகர் நாயகம் வாசுகிதேவி தம்பதிகளின் மகன் துஷ்யந்தன் இன்று தனது ஆறுவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

❋ யாழ்-சத்திர லேன் பாலக்குமார் அம்பிகை தம்பதிகளின் மகள் சங்கீதா இன்று தனது ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

❋ முல்லைத்தீவு, வண்ணுங்குளம் திருச்செல்வம் மனேன்மணி தம்பதிகளின் மகள் சுவர்ணுமேரி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

❋ மறவன்புலம் தனபாலசிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் மகள் யசோதினி இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

❋ உருத்திரபுரம் நாகரத்தினம் புவனேஸ்வரி தம்பதிகளின் மகன் தயாரன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்

❋ திருநெல்வேலி சோதிநாதன் புஷ்பலதா தம்பதிகளின் மகள் நிஷ்பா இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

### நினைவு விழாவில் பேச்சு

# சத்திய முயற்சிக்கு காந்தி வாழ்க்கை நல்ல உதாரணம்

"காந்தி அடிகள் இளம் பராயத்தினராக இருந்த காலத்தில் அவரிடம் எந்த அசாதாரண அற்புத சக்தியையும் காணமுடியாதபோதிலும்,பின்னுல் அவரிடம் கண்ட வைரம் பாய்ந்த சித்தமும் தீவிர அறிவுணர்வும், இளம் பராயத்தில் வெளிப்படவில்லை. ஆகவே யாரும் சத்திய முயற்சியினுல் தம்மை உயர்த்திக் கொள்ளலாம் என்பதனை அவரது வாழ்க்கை வரலாறு எமக்கு உணர்த்துகின்றது. இது பொதுவாக மாணவர்கள் அனைவருக்கும் பொருந்துவதாக அமையும். மாணவர்கள் எல்லோரும் கருவிலே திருவுடையவர்களாக அமைவதில்லை. ஆரம்பத்தில் திறமை அற்றுக் காணப்படும் மாணவர்கள் கூட தனது சூழ்நிலை அனுபவத்தினுலும், பெறும் கலவி அனுபவத்தினுலும் உயர்நிலைக்கு வரலாம் என்பதனை இவரது வாழ்க்கை வரலாறு உணர்த்துகின்றது.

மேற்கண்டவாறு திரு. அ. சந்திரபோஸ் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காந்தி நினைவுதின விழாவில் பேசும்போது தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு. சி. சிவசரவணபவான் தலைமையில் விழா நடைபெற்றது. வித்தியாலய மாணவ மாணவிகள் நினைவுக்கீதம் பாடினர்.

மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்தபோது வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டததில் உரையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வடமராட்சிப் பகுதி

# இளைஞர் யுவதிகட்கு இலவச வகுப்புகள் நாளை ஆரம்பம்

(புலோலி)

வல்வை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கம வடமராட்சிப்பகுதி இளைஞர், யுவதிகளுக்கு நடாத்தும் இலவச தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகளுக்கான பரிசளிப்பு வைபவமும், புதிய வகுப்பு ஆரம்ப வைபவமும் எதிர்வரும் 2-ம் 3-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 2 ம் திகதி ஆரம்பமாகவுள்ள இலவச தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துப்பயிற்சி வகுப்புகளை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரை ஆரம்பித்து வைப்பார். வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். சேனுதிராசாவும் இதில் கலந்து கொள்கிறுர்.

3 ம் திகதி வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் அப்பகுதி இளைஞர், யுவதிகளுக்கான இலவச சுருக்கெழுததுப் பயிற்சி ஆரம்ப விழாவும் கடந்த வருடம இப்பயிற்சிகளை மேற்கொண்ட இளைஞர், யுவதிகளுக்கான பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன பருத்தித்துறைஉதவி அரசாங்க அதிபர் திரு. வி. வேலும்மயிலும் விழாவை ஆரமபித்து வைப்பார். யாழ். கல்வித்திணைக்கள வர்த்தகக் கல்வியதிகாரி திரு என். சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## நூல் வெளியீடு

புங்குடுதீவு ஸ்ரீகணேசமகா வித்தியாலய அதிபரும், இலங்கை கல்விச் சேவையைச் சேர்ந்த வருமான திரு, த. துரைசிங்கம் எழுதிய "பாலர் தமிழ்" என்னும் நூல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது

## பகல் கொள்ளை

(சுண்டுக்குளி)

கோப்பாய் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டப்பிராய் கள்ளுத் தவறணையில் இனந் தெரியாத துப்பாக்கி இளைஞர்களால் 500 ரூபா ரொக்கப் பணம அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கபபட்டுள்ளது.

## சமய தீட்சை

வேலணை மேற்கு குருக்கள் மட ஆதீனத்தில் தைப்பூச தினமான அடுத்த திங்கட்கிழமை காலை ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் சைவச்சிறுர்களுக்கும், சைவப் பொது மக்களுக்கும் சமய தீட்சை அளிக்கபபடும். அன்று மாலை பண்ணிசை வகுப்பும் ஆரம்பித்து வைக்கப்படும் என மடத்தின் செயலாளர் திரு. செ. தேவராஜா அறிவித்துள்ளார்,

## சிறுவன் பிடிபட்டான்

குருநகர்வங்கியில் பணத்தை எடுத்துக் கொண்டு மினிவானில் யாழ். பஸ் நிலையத்துக்கு சென்ற பெண்மணி ஒருவரிடம் நூறு ரூபா "பிக்பொக்கட்" அடித்த பத்து வயது சிறுவன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான் இச்சிறுவன் பின்னர்சில இளைஞர்களால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டான்.

## ஸ்ரீ சக்கரம்

எவ்வித கஷ்ட நிவாரண நிவிர்த்திகளுக்கும் சகலவித சௌபாக்கிய விருத்திகளுக்கும் சாஸ்திர முறைப்படி செய்யப்பெற்று பூசையில் வைக்கப்பெற்ற ஸ்ரீ சக்கரம் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

## பயிற்சி

ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங், எலகரிககல் வயறிங் பயிற்சிகள் நாட்டின் தற்போதைய நிலைமையை முன்னிட்டு தபால்மூலம் தமிழ் மொழியில் பயிற்சியளிக்கப்படுகின்றன. விபரங்களிறகு நேரில் அல்லது முத்திரையொட்டிய தபாலுறையை அனுப்பி பெற்றுக் கொள்ளவும் JAFFNA TECHNICAL INSTITUTE 52/1ஸ்ரானலி வீதி, யாழ்ப்பாணம்.

## காணவில்லை

வேலணை சண்முகராசா யோகேஸ்வரியின் அடையாள அட்டையைக் கண்டெடுத்தவர் தொடர்பு கொள்க சன்மானம் தரபபடும். சாரதா புததகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

எஸ்லோன் வகைகள்

அலுமினியங்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், தேயிலைகள் சைக்கிள் பேமிட் விண்ணப்பப் படிவங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும பெற்றுக் கொள்ளலாம்.

ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

மாதாந்தம் 36%. வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்

05-02-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

# இஸ்ரேலுடன் சவூதியும் பெருமளவு அமெரிக்க ஆயுதங்களைப் பெறும்!

(வாஷிங்டன்)

இஸ்ரேல் அமெரிக்காவிடமிருந்து மூன்றாண்டு காலத்துக்கு 1200 கோடி டாலருக்குக்கூடிய பெறுமதியுள்ள பாதுகாப்பு, பொருளாதார உதவிகளைப் பெறவுள்ளது இந்த வகையில் ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையே பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுள்ளன இது இவ்வாறு இருக்க சவூதி அரேபியாவும் அமெரிக்க ஆயுத உதவிகளைப் பெறவுள்ளது. சவூதி அரேபியாவுக்கு அமெரிக்காவின் 40 யுத்த விமானங்களும் பல ஏவுகணைகளும் கிடைக்கவுள்ளன.

ஆயினும் சவூதி அரேபியாவுக்குக் கிடைக்கவுள்ள அமெரிக்க விமான, ஏவுகணை உதவிகள் குறித்து சவூதி அரேபிய மன்னர் அமெரிக்காவுக்கு மிக விரைவில் மேற்கொள்ளவுள்ள விஜயத்தின் போது பரிசீலிக்கப்படும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆயுதக் குறைப்பு குறித்து சர்வதேச ரீதியில் குரலெழுப்பப்படும் இவ்வேளையில் அமெரிக்க பெருமளவு ஆயுதங்களை இவ்விதம் விநியோகித்து வருவது மார்ச் 12ம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள சோவியத் யூனியன், அமெரிக்கப் பேச்சு வார்த்தைகளின் போது சோவியத் யூனியனால் பிரஸ்தாபிக்கப்படும் எனவும் அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

## உதய சிந்தனை

பாம்பு இல்லாத வீட்டிலும், பாம்பைக் கொன்ற வீட்டிலும் தூங்கலாம். பாம்பைப் பார்த்த பிறகு அது இருக்கும் வீட்டில் தூங்குவது கடினம்.

- பஞ்சதந்தரம்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

1 2 85 வெள்ளிக்கிழமை (இரத்தாக்ஷி தை 19)

# எட்டாத பழமும் உறவுக் கரமும்

அமெரிக்கா சென்றிருக்கும் அமைச்சர் அத்துலத்முதலி, அங்குள்ள செய்தியாளர்கள் மாநாடொன்றில் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகமிக முக்கியமானவை.

''எமது பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை, அதனை எம்மாலேயே தீர்த்துக் கொள்ள முடியும்'' என்பதே அவரது பேச்சின் முக்கிய சாராம்சமாகும்.

அப்படியானால் அவரது அமெரிக்க விஜயத்தின் நோக்கம் என்ன?

அடுத்து பிரிட்டனுக்கு எதற்காகப் போகவுள்ளார்? அதற்குப் பின்னர் புதுடில்லி யாத்திரை எதற்காக? இவைகளைப் பற்றி ஸ்ரீமான் பொது ஜனம் நினைத்து நினைத்து மண்டையைப் போட்டுக் குழப்பினால் அங்கொடைக்கும் செல்லநேரிடலாம்.

எனவே இவைகளைப் பற்றிச் சிந்திக்காது விடுவோம் என்று தவிர்த்து விடமுடியாது. ஏனென்றால் இனப்பிரச்சினையே இன்று எமது உயிர்ப் பிரச்சினையாகவுள்ளது.

அமைச்சர் அத்துலத் முதலி இன்று வர்த்தக அமைச்சராக இல்லை; அல்லது நிதி அமைச்சராகவும் இல்லை.

அப்படியிருந்திருந்தால், ஏதாவது உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அல்லது ஏதாவது அபிவிருத்தித் திட்டத்துக்கு நிதி உதவி பெற அவர் அமெரிக்கா சென்றுள்ளதாக எண்ணி மனதைத் தேற்றலாம்.

ஆனால், அவரே இன்று இந்நாட்டின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர். முப்படைகளும் பொலிஸாரும் அவரது நிர்வாகத்திலுள்ளவை. தடைசெய்யப்பட்ட வலயங்களின் பாதுகாவலரும் அவரே.

''பயங்கரவாதிகளைப் பூண்டோடு ஒழிப்பேன்'' என்று துட்டகைமுனு சிலை முன்னால் சபதம் மேற்கொண்ட அமைச்சர்.

''எனது திட்டங்கள் மூன்று மாதத்துள் தெரியவரும்'' என்று பகிரங்கமாகவே தெரிவித்த பெருமைக்குரியவர்

இவ்வாறெல்லாம் சொன்ன அமைச்சர் லலித் அத்துலத் முதலி, இலங்கையிலிருந்து கொண்டே வெளிநாட்டு உதவி எதுவும் எமக்குத் தேவையில்லை என்று அறிவித்திருந்தால் அதனைக் கேட்டு மக்கள் ஆறுதல் அடைந்திருப்பர்.

ஆனால் அவர் இதனை அறிவித்த இடம் வாஷிங்டன். றீகன் நிர்வாகத்தின் தலைநகரம்.

அமெரிக்காவிடம் நாம் ஆயுத உதவியோ, இராணுவ உதவியோ கேட்கவில்லை, கேட்கப்போவதுமில்லை என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அப்படியானால் அவரது அமெரிக்க விஜயத்தின் நோக்கமென்ன? அமெரிக்க அரசாங்கத்தின் அச்சாணிகளாகத் திகழும் அமைச்சர் சூல்ட்ஸ், உப ஜனாதிபதி புஷ் ஆகியோருடனான பேச்சு வார்த்தையின் தேவை என்ன?

இவ்வாறான சந்தேகங்கள் மக்கள் மனதில் எழுவது இயற்கையே!

பொதுவான பயங்கரவாதம், சமாதானம் பற்றிப் பேசவே அமெரிக்கா சென்றதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

தமிழர் மீது இராணுவத் தீர்வைத் திணிப்பதற்கு நவீன ஆயுதங்களையும், இஸ்ரேலின் ஆலோசனையையும் ஆரம்பத்திலிருந்து அள்ளி வழங்கிய அமெரிக்காவுடன் சமாதான நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் அத்துலத் முதலி பேசுகிறார் என்பதை நாம் ஒவ்வொருவரும் நம்பியே தீரவேண்டியது இன்றைய நிலையாகும்.

இராணுவ உதவி கேட்கவில்லை என்பதும், ஆயுதம் இரந்த மறுத்த பிரிட்டனுக்குச் செல்வதும் அமைச்சரின் சமாதான யாத்திரை (?) யின் முக்கிய கட்டங்களாக இருக்குமென்றால், அவர் குறிப்பிட்ட மூன்று மாதங்களுள் என்ன நடைபெறும் என்பது இன்னும் சில வாரங்களுள் தெரிந்து விடலாம்

தமிழர் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பவைகளே சமாதான விரும்பிகளால் மூலமந்திரமாக உச்சரிக்கப்பட்டு வருகின்றன

நேற்று முன்தினம் கூட பாரத லோக் சபாவில் பிரதமர் ராஜீவ் காந்தி இதனை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, ''எட்டாத பழம் புளிக்கும்'' என்ற நிலையிலிருக்காது, அமெரிக்க, பிரிட்டன் விஜயங்களைச் சுருக்கிக் கொண்டு புதுடில்லி வருவதால் பலன்கள் நிறைய உண்டு

உறவுக்கரத்தை உதறுமல் பார்த்துக்கொள்ள வேண்டும்!

## பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(டாக்கா)

பங்களாதேஷில் வழக்கறிஞர்கள் நேற்றுடன் தொடர்ந்து பதினேழு நாட்களாக நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

ஜனாதிபதி எர்ஷாத் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ள போதிலும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை நடத்துவது குறிப்பிடத்தக்கது.

## நெடுநாளின் பின் உருவாகும் உறவு

(பீக்கிங்)

சீனாவும், இந்தோனேஷியாவும் பதினெட்டு ஆண்டுகளுக்குப்பின் பொருளாதார, வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவுள்ளன.

## தூய பொது வாழ்வும் ராஜீவும்

(புதுடில்லி)

கட்சித் தாவல் தடை மசோதா அரசியல் சட்டத் திருத்தமாக லோக சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இம்மசோதா தொடர்பாக எட்டரை மணித்தியால விவாதம் நடைபெற்றது.

மசோதாவுக்கு ஆதரவாக 418 வாக்குகள் கிடைத்தன. எதிராக வாக்களிக்கப்படவில்லை. மசோதா நிறைவேறியதும் உறுப்பினர்கள் மேசையில் தட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

'பொது வாழ்வில் தூய்மையை ஏற்படுத்தும் முதல் நடவடிக்கை இது. தேர்தல் சீர் திருத்தச் சட்ட மசோதாவும் விரைவில் தாக்கலாகும்'' என்றும் பிரதமர் திரு ராஜீவ் காந்தி பேசுகையில் கூறினார்.

பிரதமர் எதிர்க்கட்சிகளுடனும் ஆலோசித்த பின்பே இம்மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

'ஒபெக்' ஸ்தாபனத்தால்

## எண்ணெய் விலையில் பொது உடன்பாடு ஏற்பட்டுள்ளது

(ஜெனீவா)

எண்ணெய் விலையைப் பொறுத்தவரை பொதுவான உடன்பாடு ஒன்றினை ஒபெக்' ஸ்தாபனம் ஜெனீவாவில் கூடி ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

பீபாய் ஒன்றிற்கு எண்ணெயின் விலை அரை டாலரால் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜெனீவாவில் கூடிய இந்த ஸ்தாபனத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் எண்ணெய் விலையில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 1000 இரு.எடை புலிவடிவான சுரு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் 462 கிலோ கிரும் எடையுள்ள புலிச்சுரு ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் 461 கிலோ கிரும் எடையுள்ள புலிச்சுரு ஒன்று பிடிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அரசுடன் பேச்சு: இடமில்லை என்கிறது பாக். எதிர்க்கட்சி

(இஸ்லாமாபாத்)

''இராணுவ ஆட்சியுடன் இனிமேல் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்த நாம் தயாராக இல்லை'' என்று பாகிஸ்தானின் எதிர்க்கட்சிக் கூட்டணி நேற்று உறுதியாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் அறிவித்துள்ள பொதுத் தேர்தலில் கலந்து கொள்வதில்லை என்றும் இத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்ற தமது நிலை தொடரும் என்றும் இக் கூட்டணி இஸ்லாமாபாத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

இதே வேளை ஆட்சியினர் தொடர்ந்தும் பாகிஸ்தானின் எதிர்க் கட்சித் தலைவர்களில் பலரையும் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்து வருகின்றனர் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## ஆலம்கானும் பயணமானர்

(ஏதென்ஸ்)

அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பாக் கிரேக்கத்தலைநகரான ஏதென்ஸில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு பாரத வெளிவிவகார இணையமைச்சர் குர்ஷித் ஆலம்கானும் பயணமாகியுள்ளார்.

## உடன்படிக்கை

(புதுடில்லி)

பாரதமும் மெக்ஸிக்கோவும் தொழில் நுட்ப, கலாசார உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன.

## மகாத்மா சமாதியில் மலரஞ்சலி

(புதுடில்லி)

தேசியதிகாரிகள் தினத்தையொட்டி பாரத ஜனாதிபதி திரு. ஜெயில்சிங், பரதமர் திரு ராஜீவ் காந்தி, துணை ஜனாதிபதி திரு ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் அண்ணல் காந்திஜி சமாதியில் மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தினர். பதினொரு மணிக்கு இரு நிமிட மௌனஞ்சலியும் செலுத்தப்பட்டது எம். பிக்களும் இதில் கலந்து கொண்டனா. இராணுவ பீரங்கி ஒரு சுற்று வேட்டுக்கள் தீர்த்தும் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிதிமந்திரி நெடுஞ்செழியன் கருத்து:

## தீண்டாமை முற்றுக ஒழிய கலப்பு மணம் பயன்படும்

(சென்னை)

''கலப்புத் திருமணங்கள் மூலம் நாட்டில் தீண்டாமையை இல்லாதொழித்துவிட முடியும்'' என்று தமிழக நிதி அமைச்சர் திரு இரா நெடுஞ்செழியன் சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

''நாட்டின் ஒற்றுமையைக் காக்க அடிப்படையாக தீண்டாமை அகற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியவர் அண்ணல் காந்தி'' என்றும் அவர் சொன்னர்.

''சமுதாய ஏற்றத் தாழ்வு அகல தீண்டாமை ஒழிப்பில் தீவிர, கவனம் செலுத்தப்பட வேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தினர்.

பால் வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி பேசுகையில், ''காந்திஜியின் கொள்கைகளை மக்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

## காபூல் வானெலி அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானியர் பதினறுபேர் பாகிஸ்தானல் கொல்லப்பட்டுள்ளதாக காபூல் வானெலி அறிவித்துள்ளது.

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10 30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷனு, ராதா, தங்கவேலு நடித்த
AV . இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

## அடுத்தடுத்து இங்கு கொள்ளை!

# யாழ் மாநகர சேவைகள் ஸ்தம்பிதமடையலாமென அச்சம்

இனந்தெரியாத இளைஞர் கோஷ்டிகளினால் யாழ்ப்பாண மாநகரசபையின் பணம் அடுத்தடுத்துக் கொள்ளையடிக்கப்பட்டுவருவதால், நகரின் குடிநீர், மின்சார விநியோக, சுகாதார சேவைகள் ஸ்தம்பிதமடையலாமென அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இருவாரத்துக்கு முன்னர் இங்கு சுமார் 15 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது, கடந்த ஞாயிற்றுக்கிழமை குப்பை அள்ளும் ட்ராக்டரைக் கடத்தியவர்கள் இன்னமும் திருப்பி ஒப்படைக்கவில்லையாம். இதற்கிடையே, மின்சாரக் கட்டணமாகச் சேர்ந்த 3700 ரூபா நேற்று கொள்ளையடிக்கப்பட்டது. இவ்வாறு அடுத்தடுத்து நடைபெறும் சம்பவங்களால் நகர வரியிறுப்பாளர்களே பாதிப்படையக் கூடும் என்று மாநகர நிர்வாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இந்த மாதத்தில் நடைபெறுது!

# ஜி. சி. ஈ. பரீட்சைக்கு தோற்றுதவர்கள் தத்தமது பாடத்துக்கு தோற்ற வசதி

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததாலும், பரீட்சை சில இடங்களில் குழப்பப்பட்டதாலும் பரீட்சைக்குத் தோற்றுத மாணவர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படாத வகையில் அப்பரீட்சையை மீண்டும் நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இப்பரீட்சை டிசம்பரில் நடைபெற்ற போது எந்தெந்த மாணவர் என்னென்ன பாடங்களுக்கு தோற்றவில்லையோ, அவரவர் அந்தந்தப் பாடங்களுக்குத் தோற்றக் கூடிய வகையில் மீண்டும் பரீட்சை நடைபெறுமென்று பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கேள்வித்தாள்களை யாழ்ப்பாணம் எடுத்துச் செல்ல ரயில் சேவையின்மை, குடாநாட்டுக்குள் கேள்வித்தாள்களைக் கொண்டு செல்ல போதிய பஸ்களும், எரிபொருளும் இல்லாமை ஆகியவைகளால் இம் மாதத்தில் இதனை நடத்தக் கூடிய சாத்தியக்கூறு இல்லை எனவும் அவர் சொன்னார்.

எனினும் பரீட்சை நடாத்தத் தயார் என்று யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தபின்னரே, இதற்கான காலம் தீர்மானிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

### மின்கம்ப தண்டனை

(மட்டுநகர்)

மட்டுநகரில் மஞ்சந்தொடுவாயில் இளைஞர் சூட்டுக்காயத்துடன் மின்கம்பத்தில் 'மரண தண்டனை' என்ற அட்டையுடன் கட்டப்பட்டிருந்தார்.

### எம். ஜி. ஆர். திங்கள் வருகிறார்

# தமிழகம் விழாக்கோலம் காணத் தயாராகிறது

திங்கட்கிழமை நாடு திரும்பும் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். தமது பயணத்தைத் தடையின்றிச் செய்து முடிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி நியூயோர்க் பப்பாய் பாதையில் சேவையிலீடுபடும் ஏயர் இந்தியாவின் போயிங் அன்று சென்னை வரை நீடிக்கப்படும்.

இதேவேளை திங்கள் அதிகாலை தமிழ் நாட்டை அடையும் தமிழக முதல்வரை காணச்செல்லும் மக்களுக்காக விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பல்லவன் பஸ் போக்குவரத்து கழகம் விழாக்காலங்களைப் போல மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு பெருந்தொகையான பஸ்களை விடவுள்ளது.

தஞ்சை பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்கள் சென்னைக்கு வெளியேயிருந்து சென்னைக்கு விசேட சேவைகளை நடத்தவுள்ளன.

### ஹாட்லி மெதடிஸ்த...

—1-ஆம் பக்கத் தொடர்

நோக்குப் பிரசுரங்கள் பற்றி ஆராயப்பட்டது.

6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புக்களை அந்தந்தக் கல்லூரிகளிலேயே நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மாணவர்களின் பாதுகாப்பையும், மாணவர் வரவை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டே மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிவ்யாயபிள்ளை தெரிவித்தார்.

### மன்னர் கள்ளடிச்...

—1-ஆம் பக்கத் தொடர்

ஆயுதங்கள், வெடிமருந்துகள், குண்டுகளும் அங்கிருந்து மீட்கப்பட்டனவாம். சிலதினங்களுக்கு முன் அடம்பனில் நால்வர் கொல்லப்பட்டதன் எதிரொலியாகவே இச்சம்பவம் நடைபெற்றதாக மன்னாரிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

### குருநகர் வங்கியில்...

—1-ஆம் பக்கத் தொடர்

யும் வெளியே இழுத்துவிட்டு வானத்தைத் தாமே ஓட்டிச் செல்வதற்கு முயற்சி செய்தனராயினும், வானின் திறப்பு அதற்குள் இருக்காததால் அவர்களின் முயற்சி பலிக்கவில்லை.

துறப்பைச் சாரதி கொண்டு சென்றிருந்ததால் அவரைப் பிடிப்பதற்கு இளைஞர்கள் முயற்சி செய்தபோது அவர் வங்கிக் கட்டடத்துக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டு நின்றுவிட்டாராம்.

அதே வேளையில், அபாய ஒலி மணியும் ஒலிக்க ஆரம்பித்ததால இளைஞர்கள் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில நிமிடங்களின் பின்னர் முன்னாலுள்ள முகாமிலிருந்து வந்த ராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களை நாலா பக்கமும் தீர்த்து பயப்பிராந்திய நிலையை ஏற்படுத்தனர்.

### திக்கம் ராணுவ...

— 1-ஆம் பக்கத் தொடர்

வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும், கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ராணுவமும் பதில்தாக்குதல் நடத்தியதாகவும், திக்கமும் அயற்கிராமங்களும் அதிரும் வகையில் இரு பகுதியும் மோதிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ராணுவ வீரர் ஒருவர் காயமடைந்ததாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் சுமார் இருபதுபேர் கொல்லப்பட்டிருக்கலாமென அப்பகுதியைச் சேர்ந்த நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்றுப்பகல் இப்பகுதியில் சில இடங்கள் தீக்கிரையானதாகவும் தெரியவந்துள்ளது.

### பஸ் விபத்தில்...

—1-ஆம் பக்கத் தொடர்

இடையில் லொறி ஒன்றுடன் மோதியதில் ஆறுபேர் காயமடைந்தார்கள், இருவர் யாழ் ஆஸ்பத்திரியிலும், மற்றவர்கள் கிளிநொச்சியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### இலங்கையில் மனித...

—1-ஆம் பக்கத் தொடர்

அவரிடம் எடுத்துரைத்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து விளக்க ஹமீத் பிரிட்டன், பிரான்ஸ் விஜயம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### போலிக் கடிதம்..

—1-ஆம் பக்கத் தொடர்

தாக இருக்குமென நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. சில சட்டத்தரணிகளால் மேற்கொள்ளப்பட்ட தனித்தனி விசாரணைகள்மூலம் இது ஒரு "உள் வீட்டு வேலை" யாக இருக்கலாமெனவும் தெரிய வந்துள்ளது. அப்பியாசக் கொப்பிக் கடதாசியில் பேனாவினால் இக்கடிதம் எழுதப்பட்டிருந்தது.

### உப்பு லொறியில்...

—1-ஆம் பக்கத் தொடர்

இந்த லொறியின் உப்பு மூடைகளுள் இயக்கமொன்றின் துண்டுப் பிரசுரங்களும், சில பத்திரிகைகளும் கிடந்ததாகவும் அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட லொறி நேற்று முன்தினமிரவு கிளிநொச்சியில் வைத்துக் கடத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

### போன நகைகள்...

—1-ஆம் பக்கத் தொடர்

படையினருக்கு அஞ்சி புதைத்து வைக்கப்பட்ட நகைகளே காணாமல் போயிருந்தன. விஷயமறிந்த இளைஞர்கள் ஸ்தலத்துக்குச் சென்று " மின்கம்பத் தண்டனை " பற்றி பொதுவான எச்சரிக்கை யொன்றை விடுத்துச் சென்றதையடுத்து காணாமல் போன நகைகள் மீண்டும் அதேயிடத்தில் கிடக்கக்காணப்பட்டனவாம்.


இலங்கைப் பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1985/86

பாடநெறிகள்:-

G. A. Q. .... .... .... B. A.
FIRST IN COM ........B. COM.
FIRST IN LAWS ............LL. B.

தகுதிகள்:

* க. பொ. த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
* விண்ணப்பப்படிவங்களையும், விபரத்திரட்டினையும் பெற விரும்புவோர் REGISTRAR, ASTAN INSTITUTE, JAFFNA. என்ற பெயருக்கு ரூபா 10/- 'காசுக்கட்டளையுடன்' சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட 9"×4" அளவுடைய தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

லண்டன்பரீட்சைக்குரியவகுப்புகளும ஆரம்பமாகின்றன

IAA. PART I
IAB FOUNDATION & INTER

சகல பாடநெறிகளுக்கான விரிவுரைகள்

ஆரம்பம 2-2-85

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
100/1 HOSPITAL ROAD, — JAFFNA.



தாயே துணை

திருமண அழைப்பு

மணமகன்:
திருநிறை செல்வன் ந. மனோகரன்
(விற்பனை பிரதிநிதி அசோகா ட்ரேடர்ஸ், கொழும்பு 11)

மணமகள்.
திருநிறை செல்வி ஆ. மல்லிகாதேவி

மங்கலநாண் பூணல்: இரத்தாக்ஷி வருடம் தைத் திங்கள் 21ஆம் நாள (03-02 1985) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 43 மணிமுதல், பிற்பகல் 1-45 மணிக்குள் வரும் இடப லக்கின சுப முகூர்த்தத்தில்,

இடம்: தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான திருக்கல்யாண மண்டபம்

அன்பான அழைப்பு: அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் இவ்வழைப்பை அன்பாக ஏற்று திருமண வைபவத்திற்கு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்,

திரு. ம. இ நடராசாவும் பாரியாரும்
"கல்வாரி"
அளவெட்டிதெற்கு
அளவெட்டி

திருமதி. கனகம்மா ஆறுமுகம்
(ஆ சிவராசா - சகோதரன்)
மல்லிகா சொப்பிங் சென்ரர்
"மல்லிகாபதி"
மார்க்கட்கிழக்கு ஒழுங்கை
மானிப்பாய்


'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அச்சகம் சேர்வீசஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சுப்பகுதியில் 1-2-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.